DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 514/2019
Prosecution Witness PW 8
.....

Name : திரு. ராஜ்குமார் Caste :

Father's name : Calling :

Village : Religion :

Taluk : Age :

நாள் - **21.11.2024.**

எதிரி ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது சிவில் சப்ளை சி.ஐ.டி. விருதுநகர் மாவட்டத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2019ம் ஆண்டு அண்ணாநகர் காவல்நிலையத்தில் வேலை பார்த்த போது, 09.04.2019 அன்று காவல்நிலைய குற்ற எண்.296/2019 குவிமுச பிரிவு 174படி வழக்கில் இறந்து போன கோவிந்தராஜ், வயது 40/2019 என்பவரின் பிரேதபரிசோதனை அலுவலாக என்னை சார்பு ஆய்வாளர் அவர்கள் நியமித்தார். நான் சட்டம் சார்ந்த மருத்துவ பேராசிரியரை சந்தித்து, சார்பு ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பிரேதபரிசோதனைக்கு உடன் இருந்து, இறந்தவரின் அங்க மச்ச அடையாளங்களை காண்பித்து, பிரேதபரிசோதனை முடியும் வரை உடன் இருந்தேன். பின்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் உத்தரவுப்படி, பிரேதபரிசோதனை செய்த கோவிந்தராஜ் என்பவரை அவரது மனைவியான திருமதி.விஜயா என்பவரிடம் நல்லடக்கம் செய்ய இறந்து போன கோவிந்தராஜ் என்பவரது பிரேதம் ஒப்படைக்கப்பட்டது. பின்பு, சட்டம் சார்ந்த மருத்துவத்துறை பேராசியரால் என்னிடம் வழங்கப்பட்ட கோவிந்தராஜ் என்பவரின் உள்ளுறுப்புகளை தடய அறிவியல் வட்டார

துறையில் ஒப்படைத்துவிட்டு, தகுந்த ஒப்பம் பெற்று, நிலையம் சென்றேன். இதுசம்பந்தமாக சார்பு ஆய்வாளர் திரு.அபிமன்பு என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை** - இல்லை (வழக்கறிஞர் ஆஜர் இல்லை).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக் கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.